# திருக்குறளும் அக மரபும்

***நெ. ஜெனிலா***
பதிவெண்: 2421128012001
தமிழ்த்துறை, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி

***நெறியாளர் முனைவர் ச. கந்தன்***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8987

## முன்னுரை

அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழியில் காலந்தோறும் புதுப்புது இலக்கியங்கள் தோன்றிச் செந்தமிழைச் செழுந்தமிழாக்கி வருகின்றன. அவ்வகையில் தொல்காப்பியர் கூறும் எட்டுவகை வனப்புகளுள் ஒன்றான "அம்மை" என்னும் வனப்புக்கு எடுத்துக் காட்டாய்த் திகழ்வன அற இலக்கியங்கள். இவ்வகை இலக்கியங்கள் யாவும் சிலவாகிய மென்மையான சொற்களைக் கொண்டே அரிய பெரிய கருத்துக்களை உலகிற்கு உணர்த்தி நிற்கின்றன. அற இலக்கியங்கள் பலவாயினும் அவற்றுக்கெல்லாம் மணிமுடியாய்த் திகழ்வது வான்புகழ் வள்ளுவர் வகுத்தளித்தத் தெய்வப் பனுவல் திருக்குறள் ஆகும்.

திருக்குறள் உலகினர் வாழ்வுக்கு வளம் கொழிக்கும் பல்பொருள் களஞ்சியம். மனமாசுக் கடிந்து தூய்மையாக்கும் இன்னறுநீர்க் கங்கை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் கலங்கரை விளக்கு. இல்லறம் என்னும் தேருக்கு அச்சாணி. பிறப்பு இறப்பு தவிர்க்கும் இன்னமிழ்தம் வான் வீட்டிற்கு ஏறிச் செல்லும் ஏணி இருட் போக்கி உலகை ஒளிபெறச் செய்யும் ஒப்பற்ற அறிவுச் சுடர் என்றெல்லாம் பெருமையாக உலகெல்லாம் பேசக்கூடிய அளவிற்கு சிறப்புப் பெற்ற நூல் திருக்குறள்.

இத்தகையச் சிறப்பு மிக்க திருக்குறளில் அக மரபுக் கொள்கைகள் அமைந்துள்ள பாங்கினை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நூல் அமைப்பு**

**"அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே"**

**(முனைவர் பெ. சுயம்பு, நன்னூல், காண்டிகையுரை, ப. 5)**

என்ற பவணந்தி முனிவர் நூலுக்கு இலக்கணம் ஓதிச் சென்றுள்ளார். நூல் என்னும் போது அது மக்களுக்கு உறுதி பயப்பதாகத் திகழ வேண்டும். அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் தந்து உலகுக்கு நன்மை பயக்க வேண்டும் என்பது சான்றோர் கருத்து ஆகும். திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களாகப் பகுக்கப்பட்டிருப்பதால் அது வீடுபற்றி விதந்துரைக்க வில்லை என நினைக்க முடியாது. காரணம் வள்ளுவர் வீடு பற்றி வெளிப்படையாகக் கூறாது போயினும் அஃது இலைமறை காய்போல நூல் முழுவதும் விரவிக் கிடப்பதை, கற்றறிந்தோர் நுண்ணிதின் உணர்ந்தின்புற முடியும்.

திருக்குறளில் பொருள் வீடின்பத்தைப் பற்றித் தான் பேசுகின்றது. இவ்வாறு நால்வகை உறுதிப் பொருளையும் தன்னகத்தேக் கொண்டு தொடர்வண்டியின் பொறியினைப் போன்று அறத்தைத் தலையாகவும் ஏனைய மூன்று பொருளையும் உடலாகவும் கொண்டு விளங்குகிறது.

**இயல்கள்**

1. அறத்துப்பால்
2. பொருட்பால்
3. காமத்துப்பால்

என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

**அக மரபு**

திருவள்ளுவர் அகப்பொருள் மரபைத் தழுவிக் காமத்துப்பால் அமைத்திருக்கலாம். எனினும் அன்பின் ஐந்திணைப் பெயர்கள் இடம் பெறவில்லை. ஆனால் ஒத்தத் தலைவன் தலைவிக்கிடையே தோன்றும் இன்ப உணர்வுகள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. அதாவது பெயரளவில் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என எடுத்தாளவில்லை யெனினும் அவற்றின் பொருண்மைக் கூறுகள் இடம்பெற்றுள்ளன.

**"ஒருதலையான் இன்னாது காமக்காப் போல இருதலை யானும் இனிது"**

**(பரிமேலழகர் உரை, திருக்குறள் கு.எ. 1196)**

என்று திருக்குறள் குறிப்பிடுகின்றது.

காவடித் தண்டின் பாரமானது இருபுறமும் ஒத்திருக்கும். அதுபோல தலைவன் தலைவியரிடையே தோன்றும் வேட்கை அமைய வேண்டும் என எடுத் துரைப்பதும் இக்கருத்து அரண் செய்வதாகும்.

திருக்குறள் காட்டும் அகமரபும் மாற்றும் நெகிழ்ச்சி போன்றவை திணை மாலை நூற்றைம்பது பாடிய கணி மேதாவியார் காலத்தில் மீண்டும் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. அக நூல்களின் பெயர்களை நோக்கும் போதும் நூலின் அமைப்பை அறியும்போதும் இவ்வுண்மை வெளிப்படுகின்றது. மேலும் அக்காலத்தில் அகப்பொருள் மரபை மீண்டும் தமிழ் இலக்கிய உலகுக்குக் கொண்டுவர மரபுக் கவிஞர்கள் முயன்றனர் என்பது உறுதியாகின்றது.

சங்க மருவிய காலத்தில் தோன்றிய அறநூல்களுள் ஒன்றான திருக்குறளில் காமத்துப்பால் அகத்திணைக் கூறுகளாக உள்ளது. எனினும் திணைத் தலைமை பெறவில்லை என்பது திண்ணம்.

ஆனால் தொடித்தலை விழுத்தண்பினார் பாடிய பாடல் காமத்துப்பாடலில் மூன்று இயல்கள் உண்டு என்று தொகுத்து கூறுகின்றது அது.

"காமத்திற்கு மூன்று என்பது" (தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வள்ளுவர் கண்ட நாடும், காமமும், ப. 181) என்று குறிப்பிடுகிறார்.

**திருக்குறளில் முப்பால்**

**அறத்துப்பால்**

| வ. எண். | இயல்கள் | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|---|
| 1. | பாயிரம் இயல் | 4 | 40 |
| 2. | இல்லற இயல் | 20 | 200 |
| 3. | துறவற இயல் | 13 | 130 |
| 4. | ஊழ் இயல் | 1 | 10 |
| | மொத்தம் | 38 | 380 |

அடிப்படையில் தனிமனித ஒழுக்கத்தை திருக்குறள் வலியுறுத்துகிறது.

மானிட வாழ்வில் இல்லறத்தை திருவள்ளுவர் போன்றுகின்ற தூய மனத் தினையும் விருந்து புரக்கும் திறத்தினையும் வலியுறுத்துகின்றது. தனி மனித ஒழுக்கமும் அன்பும் பண்பும் நிரம்பிய குடும்ப உறவும், சமுதாய நலம் நாடும் சான்றோர் துறவும் பின்னிய வாழ்வியலை அறத்துப்பாடல் எடுத்துரைக்கின்றது.

அறத்துப்பால் பகுதியில் கேடு நினைக்காத சிந்தையும் உள்ளன. அதே சமயம் கேடு நினைக்காத சிந்தையும் உலகம் பழிக்கும் தீய செயல்களைப் பழித்தலும், எளியவர்களுக்கு தருதல் உயர்ந்த அறச் செயலாக வள்ளுவர் கூறுகின்றார். வள்ளுவரின் உயர் சமூக நோக்கு வெளிப்படும் இடம் அவர்தம் இல்லற ஏற்பு என்ற கருத்தில் பொதிந்து நிற்கின்றது. துறவத்திற்கும் புத்தம், சைனம் போன்ற சமூகங்களும், தர்ம சமயமும் முதன்மை தந்து நின்ற நாட்களிலும்கூட, வாழ்க்கைத் துணை நலத்துடனும் மக்கட்பேறுடனும் சுற்றமும் நட்பும் தழுவி வாழும் இல்லறவியலை ஏற்றிப் போற்றுகின்றார் வள்ளுவர்.

இல்லத்தில் வாழ்பவன் பெற்றவர்க்கும் உற்றவர்க்கும் மட்டுமின்றி துறவிகளுக்கும், ஏழைகளுக்கும் நல்துணையாக அமைய வேண்டும் என்பதை. இல்வாழ்க்கை அறமாக வள்ளுவர் கூறுகின்றார். இயற்கை எய்திய முன்னவர்களின் பெருமையை காப்பாற்றுவதும் இல்வாழ்க்கையின் கடமை என்று எடுத்துரைக்கின்றார்.

**"துறந்தார்க்கும் துவ்வாத தவிரிக்கும் இறந்தார்க்கும்**
**இல்வாழ்வான் என்பான் துணைசுசு**
**(முனைவர் பா.வளன் அரசு, திருக்குறள் விளக்கம், கு.எ. 42)**

இவ்வாறு இல்லறத்தை வள்ளுவர் நியாயப்படுத்தும் பாண்மையில் அவரின் சமூக உணர்வு புலப்படுகிறது.

**பொருட்பால்**

| எண். | இயல்கள் | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|---|
| 1. | அரசியல் | 25 | 250 |
| 2. | அமைச்சு இயல் | 10 | 100 |
| 3. | அரண் இயல் | 2 | 20 |
| 4. | கூழ் இயல் | 1 | 10 |
| 5. | படை இயல் | 2 | 20 |
| 6. | நட்புஇயல் | 17 | 170 |
| 7. | குடி இயல் | 13 | 130 |
| | மொத்தம் | 70 | 700 |

திருக்குறளில் மிகவும் பெரியது பொருட்பால். இவை 70 அதிகாரங்களையும் 700 குறள்களையும் கொண்டது.

**அறம் - வாழ்க்கையின் ஆணி வேர்**
**இன்பம் - அறவாழ்க்கையின் அன்பு கனிந்த பழம்.**

ஆனால் பொருள், வாழ்க்கையின் அடிமரமும் கப்புங்கிளையும் கவிடும் கோடும், இலையும், தளிரும் புவும்

காயுமாகத் தழைத்துள்ளதே சமுதாயம், பொருள் எனும் சாறு, நாடி நரம்புகளில் ஓடிப்பாய்ந்தால் வாழ்க்கை வளம் பெறும் போன்ற கருத்துக்களைக் கூறுகின்றார்.

வாழ்க்கையின் அன்பு அமைந்திருக்க வேண்டும் என்று வள்ளுவர் அன்பினை அகத்தின் உறுப்பு என போற்றுகின்றார். செய்க பொருளை என்ற வள்ளுவரின் கூற்று பல பட நினைக்கத் தக்கது. எதிரியை வெற்றிக் கொள்ளத்தக்க கூரிய வாள் போன்றது. பொருளைப் பெருக்குதல் என்ற கருத்து இன்றைய உலக அரசியலில் முதன்மைப் பொருளை காட்டுவதாக அமைந்திருக்கக் காணலாம்.

எனவே தான் செல்வத்தைப் பொய்யா விளக்கம் என்கிறார் வள்ளுவர். நாடு பற்றிய அவருடைய கருத்து நெடியது நினைக்கத்தக்கது. பசியும், பிணியும், பகையும், இல்லாததே நல்ல நாடு என்று வள்ளுவர் வரைவிலக்கணம் தருகின்றார்.

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவர் மக்கட்கு**
**இறையென்று வைக்கப் படும்"**
***(மேலது. ப.388)***

என்று குறிப்பிடுகின்றார். அரசனால் காக்கப் பெறும் தனியுடைமை

ஏற்பாட்டை அறை கூவாத போதே குடி வாழ்வு மேன்மையுறுவதற்கு அந்த அரசு எவ்வாறு பயன்படும் என்பதை எண்ணியே நெறிகளைவகுப்பார்வள்ளுவர். இக்கருத்து, அரசு என்பது மக்கள் நலம் நாடும் இறைமை என்பதைத் தெளிவுப்படுத்துகிறது.

**காமத்துப் பால்**

| வ. எண். | இயல்கள் | அதிகாரங்கள் | குறட்பாக்கள் |
|---|---|---|---|
| 1. | களவு இயல் | 7 | 70 |
| 2. | கற்பு இயல் | 18 | 180 |
| | மொத்தம் | 25 | 250 |

இன்பத்துப்பால் என்று அழைக்கப் படுகிறது. இவற்றில் காதல் வாழ்வு பற்றி அதிகம் பேசப்படுகிறது. களவு கற்பு என்ற அளவிலோ, தமிழ் மரபினைப் பின்பற்றுவதோடு அமையாது. ஐந்திணையின் வழியே காமத்துப் பாலை வள்ளுவர் வகுத்துள்ளார் என்று கூறுவர். குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற முறையில் ஒவ்வொரு திணைக்கும் ஐந்தைந்து அதிகாரங்களாக இருபத்தைந்து அதிகாரங்களால் காமத்துப்பாடல் முடிகிறது. இந்தக் கருத்தினை திரு. செல்வக் கேசவராய முதலியார் தாம் எழுதிய திருவள்ளுவர் என்ற கட்டுரையில் குறித்துள்ளார்.

**"காமத்துப்பாலில் வரும் குறள் ஒவ்வொன்றும் நாடக நூலில் வரும் பேச்சுக்கள் போல் யாரேனும் ஒருவர் கூற்றாக அமைந்திருப்பது வெள்ளிடை மலை"**
***(தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், வள்ளுவர் கண்ட நாடும், காமமும், ப.101)***

என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் குறிப்பிடுகின்றார். ஆதலால் இதனை நாடக நூல் என ஒருவகையாகக் கூறலாம். நாடக வழக்கு எனத் தொல்காப்பிய மரபும் இறையனாரகப் பொருள் மரபும் கூறுவதனை உரையாசிரியர் எடுத்துக் காட்டுகின்றார்.

ஒவ்வொன்றும் ஒவ்வொரு காதற் காப்பியம். ஒரு பேச்சில் திரண்டு விளங்கும் நாடகம், இன்றைய நடைமுறைக்கு ஏற்ப விளக்கினால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாடக பாத்திரத்தின் பேச்சாக அமையும் சிறுகதை எனலாம். 250 சிறுகதைகளும் 250 காதல் துறையினை விளக்குகின்றது. காதலின் கடவுள் தன்மையை விளக்குவது போன்று அமைகின்றன.

அன்பின் விளக்கமே ஒவ்வொரு குறளிலும், வெவ்வேறு நிலைக்கேற்ற காட்சியாகத் தோன்றக் காணலாம். அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலான

தொகை நூல்கள் போலத் திருக்குறளில் வரும் காமத்துப் பாலும் இந்த வகையில் அமையும்.

## தொகுப்புரை

சங்க இலக்கியங்களின் ஒழுக்கத்தை கண்டிக்க எழுந்த நூல் பதினெண் கீழ்க்கணக்கு. பரத்தை ஒழுக்கம், மது அருந்துதல் போன்றவை சங்க இலக்கியத் தில் போற்றப்பட்டன. அவை தவறு என்று திருக்குறள் இரண்டு வரியில் உலகிற்கு எடுத்துரைத்தது. அத்தகைய சிறப்பு மிக்க திருக்குறளின் அகமரபு சார்ந்த கருத்துக்கள் இக்கட்டுரையில் விரிவாக விளக்கப் பட்டுள்ளன.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று நிலைகளும் விரிவாக விளக்கம் பெற்றுள்ளன. மேலும் அகமரபு என்னும் போது முதற், கரு, உரி என்பது அடிப்படையாகவே இடம்பெறக் கூடியவை. அத்தகைய அடிப்படையான ஒன்று இடம் பெறாமைக்குக் காரணம் என்ன என்பதை அறிய முடிகின்றது.

திருக்குறளில் இயல் வைப்பு முறை மற்றும் முப்பால்களின் வைப்பு முறை ஆகியவை இக்கட்டுரையில் விளக்கம் பெற்றுள்ளன. அக இலக்கியங்களில் காணப்படும் களவு கற்பு ஆகிய இரண்டும் திருக்குறளில் இடம்பெற்ற முறையை இக் கட்டுரையின் வழி அறியமுடிகின்றது.